முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை

**முன்னிலை: திருமதி K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 31-ம் நாள் வெள்ளிக்கிழமை.

**<u>குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.154/2024</u>**

*(CNR.No.TNSV01004452/2024)*

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | கூடுதல் மகளிர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிவகங்கை. |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டு பட்டிகை வழக்கு எண்.142/2019 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | சந்திரன்-A1, (53/2024)<br>த/பெ.செத்தூரி,<br>திருப்பதி நகர்,<br>வண்டவாசி ரோடு, சிவகங்கை,<br>சிவகங்கை மாவட்டம். |
| எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் | தமிழ் நாடு அரசுக்காக ஆய்வாளர்,<br>சிவகங்கை நகர் காவல் நிலைய குற்ற எண்.501/2014 |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | 1) விசாரணை நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 506(ii)-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, 1, 2 எதிரிகள் மீதான மேற்படி குற்றச்சாட்டுக்கள் முழுவதுமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, மேற்படி எதிரிகளை 271(1) of BNSS Act-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>2) இதச பிரிவு 324 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து 1-ம் எதிரி குற்றவாளி என |

| | |
|---|---|
| | சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து 1-ம் எதிரிக்கு இரண்டு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை பொறுத்து 1-ம் எதிரிக்கு ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மூன்று மாதம் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 271(2) of BNSS-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. 1-ம் எதிரிக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை அவர் ஏற்கனவே இந்த குற்ற எண்ணில் சிறையிலிருந்த காலமான 17.09.2014 முதல் 24.09.2014 வரையுள்ள காலத்தை தண்டனை காலத்திலிருந்து 468 of BNSS-ன் கீழ் கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி சட்டப்பிரிவுகளில் பிறப்பிக்கப்பட்ட தண்டனைகளை 1-ம் எதிரி ஏக காலத்தில் அனுபவித்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது.<br>3) இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து மட்டும் 2-ம் எதிரி குற்றவாளி என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் இ.த.ச பிரிவு 324-ன் கீழ் 2-ம் எதிரிக்கு ரூ.1,000/- அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் ஒரு மாதம் சிறைத்தண்டனை விதித்தும் (1, 2 எதிரிகளுக்கு சேர்த்து மொத்த அபராத தொகை ரூ.11,000/-) பிரிவு 271(2) of BNSS-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | **இறுதியாக,** இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, விசாரணை நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.142/2019-ல் கடந்த 28.11.2024-ம் தேதியன்று மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு எதிராக வழங்கப்பட்ட தண்டனையை கீழ்க்கண்டபடி மாற்றி அமைத்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:34:14 +0530

31.07.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

| | |
|---|---|
| | விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்/ எதிரிக்கு இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றத்திற்கு வழங்கப்பட்ட இரண்டு வருடம் மெய்க்காவல் சிறைத் தண்டனையை ஆறு மாத காலமாக மாற்றியமைத்தும், பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றத்திற்கு வழங்கப்பட்ட ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனையை ஆறு மாத காலமாக மாற்றியமைத்தும், மேல்முறையீட்டாளர்/ எதிரி மேற்படி தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும், மேல்முறையீட்டாளர்/ எதிரிக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை அவர் ஏற்கனவே இந்த குற்ற எண்ணில் சிறையிலிருந்த காலமான 17.09.2014 முதல் 24.09.2014 வரையுள்ள காலத்தை தண்டனை காலத்திலிருந்து 468 of BNSS-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்றும், மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு விசாரணை நீதிமன்றத்தால் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அபராத தொகை ரூ.10,000/-ஐ உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>விசாரணை நீதிமன்றமான கூடுதல் மகளிர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிவகங்கை இம்மேல்முறையீட்டாளர்/ எதிரியை கையகப்படுத்தி தீர்ப்பின்படியான சிறைதண்டனை காலத்தை அனுபவிக்க அவரை சிறைக்கு அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்படுகிறது. |
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 19.12.2024 |
| ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள் | 02.01.2025 |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | 31.07.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 14.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:34:20 +0530

31.07.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

திரு.K.சித்திரைச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.R.பாலமுருகானந்தம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>தீ ர் ப் பு ரை-</u>**

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் சிவகங்கை கூடுதல் மகளிர் நீதிமன்றம், ஆண்டு பட்டிகை வழக்கு எண்: 142/2019-ல் உள்ள 1-ம் எதிரி மேல்முறையீட்டாளர் ஆவார்.

2. **<u>எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-</u>**

இவ்வழக்கில் புகார்தாரர் முத்துலெட்சுமிக்கு சிவகங்கை வண்டவாசி ரோட்டில் உள்ள திருப்பதி நகரில் 20 செண்ட் வீட்டு மனை உள்ளதாகவும், அதற்கு பக்கத்தில் எதிரிகளுக்கும் 20 செண்ட் வீட்டு மனை உள்ளதாகவும், அதில் 1-ம் எதிரி வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், அதற்கு பக்கத்தில் 1-ம் எதிரியின் அண்ணன் அழகு என்பவர் புது வீடுகட்டி உள்ளதாகவும், அதற்கு கரண்ட் இழுப்பது சம்பந்தமாக புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 16.09.2014-ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு புகார்தாரர் முத்துலெட்சுமிக்கு சொந்தமான இடத்தில் 1-வது எதிரி EB போஸ்ட் ஊண்டுவதாக தகவல் கேள்விப்பட்டு புகார்தாரர் முத்துலெட்சுமி அங்கு போய் 1-வது எதிரியிடம் ஏன் என் இடத்தில் கம்பத்தை ஊண்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு 1-வது எதிரி

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:34:27 +0530

31.07.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

என்னடி தேவடியா முண்டை நீ என்னடி கேட்கிறது என்று சொல்லி அவருக்கு மன உளைச்சலையும், அவமானத்தையும் ஏற்படுத்தி 1-வது எதிரி தன் கையில் வைத்திருந்த இரும்பு ராடால் புகார்தாரரின் முழங்கை, முன்னங்கையில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், 1-வது எதிரி சாட்சி-1ன் மாராப்பு துணியை பிடித்து இழுத்து கையால் அடித்து கீழே தள்ளியும், அருகில் இருந்த 2-வது எதிரி புகார்தாரரை அசிங்கமாக திட்டி கம்பால் புகார்தாரரின் முதுகு, உடம்பில் அடித்து உள்காயத்தை ஏற்படுத்தியும், பிறகு எதிரிகள் இருவரும் புகார்தாரரைப் பார்த்து மரியாதையாக போய்விடு இல்லையென்றால் உன்னை வெட்டி கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1-வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2-ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324 506(ii)-ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாகக் சிவகங்கை நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**4.** விசாரணை நீதிமன்றம், இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து 1-ம் எதிரிக்கு இரண்டு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை

விதித்தும், பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை பொறுத்து 1-ம் எதிரிக்கு ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மூன்று மாதம் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 271(2) of BNSS-ன் கீழும், 1-ம் எதிரிக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை அவர் ஏற்கனவே இந்த குற்ற எண்ணில் சிறையிலிருந்த காலமான 17.09.2014 முதல் 24.09.2014 வரையுள்ள காலத்தை தண்டனை காலத்திலிருந்து 468 of BNSS-ன் கீழ் கழித்துக் கொள்ளவும், மேற்படி சட்டப்பிரிவுகளில் பிறப்பிக்கப்பட்ட தண்டனைகளை 1-ம் எதிரி ஏக காலத்தில் அனுபவித்துக் கொள்ளவும் உத்தரவிட்டுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய 1-ம் எதிரி இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5. மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:**

i) விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும் ஆவணங்களுக்கும் மாறாக உள்ளது.

ii) விசாரணை நீதிமன்றம், விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் வாக்கு மூலங்களில் இருந்து எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக பயன்படுத்தி விடுதலை செய்ய வேண்டுமே தவிர குற்றவாளி என முடிவு செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

iii) அ.சா.1 புகார்தாரர் தனது புகாரிலோ, 161 வாக்குமூலத்திலோ, புகார் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டக் காரணத்தை குறிப்பிட்டு கூறவில்லை. மேலும்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:34:40 +0530

சம்பவம் ஒரு நாள் கழித்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் புகாரில் சம்பவ நேரம் 6.00 மணி என்றும், மருத்துவரிடம் சம்பவ நேரம் 6.30 என்றும் அ.சா.1 கூறியுள்ளார். மேலும் அ.சா.1 தனது புகாரிலும், 161 வாக்குமூலம் ஆகியவற்றிலும் தன்னை தாக்கியது இரும்பு ராடு என்றும், புகார்தாரர் டாக்டரிடம் இரும்பு கம்பி மற்றும் அருவாளால் தாக்கியதாகவும், மேலும் புகார்தாரர் தனது புகாரிலும், 161 வாக்குமூலத்திலும் தன்னை 2 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார். மேலும் டாக்டர் தனது குறுக்கு விசாரணையில் மேலேகண்ட காயங்கள் கீழே தடுமாறி விழுந்தாலும் ஏற்படலாம் என கூறியுள்ளார். அதனையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது.

iv) அ.சா.1 புகாரிலும், 161 வாக்குமூலத்திலும் தன்னை இரும்பு ராடுவினாலும், 2-வது எதிரி கம்பாலும் அடித்ததாக கூறியுள்ளார். ஆனால் அ.சா.1 டாக்டரிடம் இரும்பு கம்பியாலும், அருவாளாலும் தாக்கியதாக கூறியுள்ளார். ஆயதங்கள் வேறுபட்டுள்ளது. இதனையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது.

v) இந்த வழக்கில் சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் இரும்பு கம்பியோ, கம்போ, அருவாளோ இந்த விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டு விசாரணை நீதிமன்றத்தில் தாவா வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. இதனையும் விசாரணை நீதிமன்றம் தனது கவனத்தில் கொள்ள தவறிவிட்டது.

vi) இந்த வழக்கில் அ.சா.2, அ.சா.1-ன் மகன் ஆவார். அ.சா.3, அ.சா.1-ன்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:34:47 +0530

சகோதரன் ஆவார். அ.சா.4, அ.சா.1ன் மருமகன் ஆவார். மேலும் சம்பவ இடத்திற்கு அருகில் அழகப்பன், அழகு என்பவர் வீடு இருந்தது. அவர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை. மேலும் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் நெருங்கிய உறவுக்காரர்கள் ஆவார்கள். இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகளாக யாரையும் விசாரிக்கவில்லை. இதனையும் விசாரணை நீதிமன்றம் தனது கவனத்தில் கொள்ள தவறிவிட்டது.

vii) புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்த அன்றே இரவு 8.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு தகவல் தெரியும் என சாட்சியமளித்துள்ளார். மேலும் புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையிலும் சம்பவம் நடந்த 10 நாள் கழித்து, தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்தார். ஆனால் அரசு தரப்பு வழக்கானது 17.09.2014-ம் தேதி விசாரித்ததாக உள்ளது. மேலும் தனது குறுக்கு விசாரணையில் அ.சா.2 சம்பவம் முடிந்து வந்ததாக கூறியுள்ளார். இதனையும் விசாரணை நீதிமன்றம் தனது கவனத்தில் கொள்ள தவறிவிட்டது.

viii) அ.சா.2 தனது முதல் விசாரணையில் தான் வந்த போது சம்பவ இடத்தில் E.B.Wireman மற்றும் அலுவலர்கள் அங்கு இருந்தார்கள் எனவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் விசாரணை அதிகாரி அவர்கள் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை. மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் போலீஸ் தன்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார். இதனையும் விசாரணை நீதிமன்றம் தனது கருத்தில் கொள்ள தவறிவிட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:34:53 +0530

31.07.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

ix) அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் அ.சா.1 சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்துள்ளதாக கூறியுள்ளார். மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் இரும்பு கம்பி வேறு ராடு வேறு எனக்கூறியுள்ளார். மேலும் அ.சா.3 சம்பவ இடத்தில் நிறைய வீடு இருப்பதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் அ.சா.3 அ.சா.1யை மருத்துவமனையில் சேர்த்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் அ.சா.1யை மருத்துவமனையில் சேர்க்கவில்லை எனக் கூறியுள்ளார். மேற்கண்ட முரண்பாடுகளை விசாரணை நீதிமன்றம் தனது கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

x) அ.சா.4 பார்வை மகஜர் சாட்சியாவார். அரசு தரப்பு வழக்கானது 17.09.2014-ம் தேதி காலை 8.00 மணிக்கு புகார் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்ததாக கூறப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.4 தனது சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக 16.09.2014-ம் தேதி மாலை 6.00 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜரில் கையெழுத்து செய்ததாக தனது முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். இதிலிருந்தே அரசு தரப்பில் வழக்கானது முறையாக விசாரணை செய்யாமல், விசாரணை நடைபெற்றுள்ளது என்பதனைக் காட்டியுள்ளது. இதனையும் விசாரணை நீதிமன்றம் தன் கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

xi) அ.சா.6 புகார்தாரருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஆவார். அவர் தனது 161 வாக்குமூலத்திலோ தனது முதல் விசாரணையிலோ, புகார்தாரருக்கு

எந்த இடங்களில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், அதனின் அளவுகள் பற்றியோ குறிப்பிட்டு கூறவில்லை. அதனையும் விசாரணை நீதிமன்றம் தனது கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

xii) அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் சம்பவத்திற்கு காரணமான E.B போஸ்ட் ஊண்டிய இடம் புகார்தாரருக்கு சொந்தமானது என காட்ட எந்த ஆவணமும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார். மேலும் மின்சார ஊழியர்களும் விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார். இதனையும் விசாரணை நீதிமன்றம் தனது கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

xiii) விசாரணை நீதிமன்றம் மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிகளையும், சான்றாவணங்களையும் சீர்தூக்கி பார்த்து எதிரிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்காமல் 1-ம் எதிரிக்கு எதிராக விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

எனவே, மேல்முறையீடுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை கோப்பிற்கு எடுத்து, சிவகங்கை கூடுதல் மகளிர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.142/2019-ல் கடந்த 28.11.2024-ம் தேதியன்று வழங்கிய தண்டனையை இரத்து செய்தும், மேல்முறையீட்டாளர்/எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்தும், உத்தரவிட வேண்டி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6. <u>இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்</u>:-**

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:35:09 +0530

31.07.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

1 விசாரணை நீதிமன்றம் எதிரி மீதுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவு 324 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டிருப்பதாக கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 விசாரணை நீதிமன்றமான சிவகங்கை கூடுதல் மகளிர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.142/2019-ல் கடந்த 28.11.2024-ம் தேதியன்று இவ்வழக்கு எதிரியான மேல்முறையீட்டாளருக்கு எதிராக பிறப்பித்த தண்டனை தீர்ப்பும், தீர்ப்பு தண்டனையும் ரத்து செய்யத்தக்கதா அல்லது நிலைநிறுத்தத்தக்கதா? அல்லது மாற்றியமைக்கத்தக்கதா?

3 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

**<u>பிரச்சனைகள் : 1 முதல் 3:-</u>**

**7)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் புகார்தாரர் முத்துலெட்சுமிக்கு சிவகங்கை வண்டவாசி ரோட்டில் உள்ள திருப்பதி நகரில் 20 செண்ட் வீட்டு மனை உள்ளதாகவும், அதற்கு பக்கத்தில் எதிரிகளுக்கும் 20 செண்ட் வீட்டு மனை உள்ளதாகவும், அதில் 1-ம் எதிரி வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், அதற்கு பக்கத்தில் 1-ம் எதிரியின் அண்ணன் அழகு என்பவர் புது வீடுகட்டி உள்ளதாகவும், அதுக்கு கரண்ட் இழுப்பது சம்பந்தமாக புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 16.09.2014-ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு புகார்தாரர் முத்துலெட்சுமிக்கு சொந்தமான இடத்தில் 1-வது எதிரி EB போஸ்ட் ஊண்டுவதாக தகவல் கேள்விப்பட்டு புகார்தாரர் முத்துலெட்சுமி அங்கு போய் 1-வது

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:35:16 +0530

31.07.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

எதிரியிடம் ஏன் என் இடத்தில் கம்பத்தை ஊண்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு 1-வது எதிரி என்னடி தேவடியா முண்டை நீ என்னடி கேட்கிறது என்று சொல்லி அவருக்கு மன உளைச்சலையும், அவமானத்தையும் ஏற்படுத்தி 1-வது எதிரி தன் கையில் வைத்திருந்த இரும்பு ராடால் புகார்தாரரின் முழங்கை, முன்னங்கையில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், 1-வது எதிரி சாட்சி-1ன் மாராப்பு துணியை பிடித்து இழுத்து கையால் அடித்து கீழே தள்ளியும், அருகில் இருந்த 2-வது எதிரி புகார்தாரரை அசிங்கமாக திட்டி கம்பால் புகார்தாரரின் முதுகு, உடம்பில் அடித்து உள்காயத்தை ஏற்படுத்தியும், பிறகு எதிரிகள் இருவரும் புகார்தாரரைப் பார்த்து மரியாதையாக போய்விடு இல்லையென்றால் உன்னை வெட்டி கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1-வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2-ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324 506(ii)-ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** இருதரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம் இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து 1-ம் எதிரிக்கு இரண்டு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை பொறுத்து 1-ம் எதிரிக்கு ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மூன்று மாதம் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 271(2) of BNSS-ன்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:35:22 +0530

கீழும், 1-ம் எதிரிக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை அவர் ஏற்கனவே இந்த குற்ற எண்ணில் சிறையிலிருந்த காலமான 17.09.2014 முதல் 24.09.2014 வரையுள்ள காலத்தை தண்டனை காலத்திலிருந்து 468 of BNSS-ன் கீழ் கழித்துக் கொள்ளவும், மேற்படி சட்டப்பிரிவுகளில் பிறப்பிக்கப்பட்ட தண்டனைகளை 1-ம் எதிரி ஏக காலத்தில் அனுபவித்துக் கொள்ளவும் உத்தரவிட்டுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய 1-ம் எதிரி இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**9)** இவ்வழக்கில் உள்ள சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 திருமதி.முத்துலெட்சுமி என்பவர் இவ்வழக்கின் சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்தும் புகார் வாக்குமூலம் கொடுத்த புகார்தாரர் ஆவார். அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய இருவரும் இவ்வழக்கின் சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.4 பார்வை மகஜரில் கையொப்பமிட்ட சாட்சி ஆவார். அ.சா.6 இவ்வழக்கின் அ.சா.1 முத்துலெட்சுமி என்பவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஆவார். அ.சா.1 தனது முதல் விசாரணையில் கடந்த 16.09.2014-ம் தேதி மாலை 6.00 மணிக்கு தான் வேலைக்கு போய்விட்டு தனது இடம் வந்துகொண்டிருந்த போது எதிரிகள் தனக்கு சொந்தமான இடத்தில் EB போஸ்ட் ஊண்டிக்கொண்டிருந்தார்கள் என்றும், தான் அருகில் சென்று ஏன் தன்னிடம் கேட்காமல் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதாகவும், அவர்கள் தன்னைப் பார்த்து தேவிடியா முண்டை, அவுசாரி முண்டை என்று

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:35:27 +0530

ஆபாசமாகப் பேசியதாகவும், அப்பொழுது சந்திரன் அருகில் கிடந்த இரும்பு ராடை எடுத்து தனது இடது முழங்கை, இடது கை, இடுப்பு ஆகிய பகுதிகளில் தாக்கியதாகவும், இதனால் தனக்கு இரத்தக்காயம் உண்டானது என்றும், இடுப்பு வலி இன்றைய தேதி வரையில் தனக்கு இருக்கிறதாகவும், அதற்கு அரசு மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை எடுத்து வருகிறதாகவும், அடித்ததுடன் 1-ம் எதிரி சந்திரன் தனது சேலையைப் பிடித்து இழுத்து சேலையை கிழித்து கீழே பிடித்து தள்ளிவிட்டார் என்றும், மேலும் தன்னை அசிங்கமாக பேசியும், 2-ம் எதிரி ராக்கு கம்பை வைத்து தனது முதுகில் அடித்து காயத்தை உண்டாக்கி கீழே தள்ளி உன்னை நாங்கள் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியதாகவும், அப்பொழுது அந்த வழியாக வந்த தனது மகன் சம்பவ இடத்திற்கு வந்து தன்னிடம் விசாரித்ததாகவும், எதிரிகளிடம் ஏன் என் அம்மாவை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு 2-ம் எதிரி ராக்கு கல் ஒன்றை எடுத்து வீசியதில் தனது மகன் அருண்குமாருக்கு கன்னத்தில் காயம் ஏற்பட்டதாகவும், அப்பொழுது அந்த வழியாக வந்த தன் அண்ணன் மலைச்சாமி, தனது அண்ணன் மகன் ராமு ஆகியோர் அந்த இடத்திற்கு வந்து சண்டையை விலக்கிவிட்டு தன்னை அழைத்துச் சென்று சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும், அங்கு தான் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையெடுத்ததாகவும், அப்பொழுது சிவகங்கை நகர் காவல் நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளர் தன்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் வாங்கியதாகவும், சாட்சியமளித்துள்ளார்.

**10)** மேலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1-ன் மகனான

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:35:33 +0530

அ.சா.2 அருண்குமார் என்பவர் தனது முதல் விசாரணையில் கடந்த 16.09.2014-ம் தேதியன்று தான் ஐடிஐ-க்கு போய்விட்டு இந்த வழக்கின் சம்பவ இடம் வழியாக வந்து கொண்டிருந்த போது மாலை சுமார் 6.00 மணிக்கு தனது தாயார் ரத்தக்காயத்துடன் கீழே விழுந்து கிடந்ததாகவும், அங்கு EB வயர்மேன் மற்றும் அலுவலர்கள் அங்கிருந்தார்கள் என்றும், எதிரிகள் இருவரும் அங்கிருந்ததாகவும், 1-ம் எதிரி கையில் ஒரு கம்பு இருந்தது என்றும், உடனே தான் போன் செய்து தனது மாமா மலைச்சாமி, மலைச்சாமியின் மகன் ராமு, தனது பெரியப்பா மலைச்சாமி ஆகியோருக்கு தகவல் சொல்லி அங்கு வரச்சொன்னதாகவும், தனது தாயார் எதிரிகள் தன்னை தாக்கியதாக சொன்னார் என்றும், அதன் பிறகு தனது தாயாரை சிவகங்கை அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**11)** மேலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1-ன் அண்ணனான அ.சா.3 மலைச்சாமி என்பவர் தனது முதல் விசாரணையில் அ.சா.1 தன்னுடைய தங்கை என்றும், அ.சா.2 தன்னுடைய மருமகன் என்றும், தனக்கு சம்பத் என்றொரு பெயரும் உண்டு என்றும், தனது அரசு ஆவணங்கள் அனைத்தும் மலைச்சாமி என்ற பெயரில் உள்ளது என்றும், ஒரு வருடத்திற்கு முன்பு தேதி ஞாபகமில்லை என்றும், அ.சா.1 20 செண்ட் இடம் வாங்கியதாகவும், அந்த இடத்தில் வைத்து கம்பி ராடை வைத்து அ.சா.1யைத் தாக்கியதாகவும், 2-ம் எதிரி கம்பை வைத்து அ.சா.1யை தாக்கியதாகவும் கேள்விப்பட்டேன் என்றும், அதன் பிறகு தனது தங்கையை சிவகங்கை அரசு மருத்துவமனையில் சென்று பார்த்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:35:40 +0530

31.07.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

**12)** மேலும், இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.4 தனது முதல் விசாரணையில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், இந்த கையெழுத்தை கடந்த 16.09.2014-ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு தான் வண்டவாசி போய்விட்டு சிவகங்கைக்கு வந்த போது திருப்பதி நகரில் வைத்து காவல் துறையினர் சம்பவ இடத்தை பார்த்துக் கொண்டிருந்தனர் என்றும், அந்த இடத்தில் வைத்து தான் கையெழுத்து செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** மேலும் இவ்வழக்கில் அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் குறித்து சான்று வழங்கிய அ.சா.6 மருத்துவர் திரு.காஜா மைதீன் என்பவர் தனது முதல் விசாரணையில் கடந்த 16.09.2014-ம் தேதியன்று சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்த போது இரவு 7.50 மணிக்கு சிவகங்கை வண்டவாசி கிராமத்தைச் சேர்ந்த அமாவாசை மனைவி முத்துலெட்சுமி என்பவர் தன்னை 6.30 மணிக்கு இரண்டு தெரிந்த நபர்கள் இரும்பு கம்பியாலும், அருவாளாலும் தாக்கியதாக கூறியதாகவும், அவருக்கு முதலுதவி அளித்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை முடிந்து அறுவை சிகிச்சை நிபுணர் அவரின் அறிவுறுத்தலின் படி அவரது காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**14)** எனவே மேலே விவரித்தவாறு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மேல்முறையீட்டாளர்/எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு இதச பிரிவு 324 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:35:45 +0530

நிரூபிக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்/எதிரி குற்றவாளி என தீர்வு கண்டுள்ளதில் சட்டப்படியும், வழக்கு பொருண்மைகளின்படியும் தவறு ஏதும் இருப்பதாக இந்நீதிமன்றம் கருத இயலவில்லை. மேலும் புகார்தாரரான அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளதையும், புகார்தாரரான அ.சா.1-க்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் காயங்கள் குறித்து அ.சா.6 மருத்துவர் சாட்சியம் அளித்துள்ளதையும், மேலும் அ.சா.1 புகார்தாரருக்கு அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் நெருங்கிய உறவுக்காரர்கள் என்பதையும், இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகளாக யாரையும் விசாரிக்கவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**15)** மேலும் இவ்வழக்கின் அ.சா.1 புகார்தாரர் தனது புகார் வாக்கு மூலத்திலும், கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்திலும் புகார் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்பதையும், மேலும் சம்பவம் ஒரு நாள் கழித்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும், மேலும் புகார் வாக்கு மூலத்தில் சம்பவ நேரம் 6.00 மணி என்றும், மருத்துவரிடம் சம்பவ நேரம் 6.30 என்றும், புகார்தாரராகிய அ.சா.1 கூறியுள்ளார் என்பதையும், மேலும் அ.சா.1 தனது புகார் வாக்குமூலம் மற்றும் கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலம் ஆகியவற்றிலும் புகார்தாரரைத் தாக்கியது இரும்பு ராடு என்றும், புகார்தாரர் மருத்துவரிடம் இரும்பு கம்பி மற்றும் அருவாளால் தாக்கியதாகவும், மேலும் புகார்தாரர் தன்னை 2 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்பதையும், மேலும் மருத்துவர் கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்திலோ, தனது முதல் விசாரணையிலோ, புகார்தாரருக்கு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:35:51 +0530

எந்த இடங்களில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், அதனின் அளவுகள் பற்றியோ குறிப்பிட்டு கூறவில்லை என்பதையும், மேலும் மருத்துவர் தனது குறுக்கு விசாரணையில் மேலேகண்ட காயங்கள் கீழே தடுமாறி விழுந்தாலும் ஏற்படலாம் என்று கூறியுள்ளார் என்பதையும், இந்த வழக்கில் சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் இரும்பு கம்பியோ, கம்போ, அருவாளோ இந்த விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டு விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**16)** எனவே, வழக்குச் சம்பவம் 2014-ல் நடந்திருப்பதாலும், மேல்முறையீட்டாளர்/எதிரியின் வயதைக் கருத்தில் கொண்டும், புகார்தாரருக்கும் மேல்முறையீட்டாளர்/எதிரிக்கும் இடையே எழுந்த பிரச்சனை உரிமையியல் சார்ந்த பிரச்சனையாக இருந்து குற்றவியல் பிரச்சனையாக மாறியிருப்பதைக் கருத்தில் கொண்டும், புகார்தாரரை இம்மேல்முறையீட்டாளர்/எதிரி தாக்கியதாகக் கூறப்படும் இரும்பு கம்பியோ, கம்போ, அருவாளோ கைப்பற்றி விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படாத நிலையிலும், புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று அ.சா.ஆ.6 விபத்து பதிவேடு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும், விசாரணை நீதிமன்றம் கடந்த 28.11.2024-ம் தேதியன்று ஆண்டு பட்டிகை வழக்கு எண்.142/2019-ல் இம்மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு எதிராக வழங்கியுள்ள தண்டனை தீர்ப்பினை மாற்றியமைப்பதே வழக்கு பொருண்மைகளின்படி சரியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதி, அவ்வாறே இந்த பிரச்சனைகளுக்கு விடை காணப்படுகிறது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:35:57 +0530

31.07.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

**இறுதியாக,** இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, விசாரணை நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.142/2019-ல் கடந்த 28.11.2024-ம் தேதியன்று மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு எதிராக வழங்கப்பட்ட தண்டனையை கீழ்க்கண்டபடி மாற்றி அமைத்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றத்திற்கு வழங்கப்பட்ட இரண்டு வருடம் மெய்க்காவல் சிறைத் தண்டனையை ஆறு மாத காலமாக மாற்றியமைத்தும், பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றத்திற்கு வழங்கப்பட்ட ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனையை ஆறு மாத காலமாக மாற்றியமைத்தும், மேல்முறையீட்டாளர்/எதிரி மேற்படி தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும், மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை அவர் ஏற்கனவே இந்த குற்ற எண்ணில் சிறையிலிருந்த காலமான 17.09.2014 முதல் 24.09.2014 வரையுள்ள காலத்தை தண்டனை காலத்திலிருந்து 468 of BNSS-ன் கீழ் கழித்துக் கொள்ள வேண்டுமென்றும், மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு விசாரணை நீதிமன்றத்தால் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அபராத தொகை ரூ.10,000/-ஐ உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

விசாரணை நீதிமன்றமான கூடுதல் மகளிர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிவகங்கை இம்மேல்முறையீட்டாளர்/எதிரியை கையகப்படுத்தி தீர்ப்பின்படியான சிறைதண்டனை காலத்தை அனுபவிக்க அவரை சிறைக்கு

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:36:03 +0530

31.07.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 31-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.31 17:36:10 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**<u>நகல்:</u>**
கூடுதல் மகளிர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை.
குற்றவியல் மேல்முறையீட்டு
வழக்கு எண்.154/2024
தீர்ப்புரை நாள்: 31.07.2026